10 லட்சம் பேரை ஈர்த்த மதுரை கலைஞர் நூலகம்

முதல்வர் பெருமிதம்

சென்னை, ஜூலை 31: மதுரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் 10 லட்சம் பேரை ஈர்த்துள்ளதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

'எக்ஸ்' தளத்தில் அவர் புதன்கிழமை வெளியிட்ட பதிவு:

மதுரையில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் இத்தனை குறுகிய காலத்துக்குள் பத்து லட்சம் வருகையாளர்களைக் கடந்துள்ளது பெரும் மகிழ்ச்சியளிக்கிறது.

மதுரை நூலகம் போன்று திருச்சியிலும், கோவையிலும் மாபெரும் நூலகங்கள் அமையவுள்ளன. அறிவுத்தாகம் கொண்டோரது தாகத்தைத் தணித்து, தமிழ்நாட்டில் வாழ்வோரது சிந்தனையையும் வாழ்வையும் இத்தகைய நூலகங்கள் வளப்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் பணிகளைத் தொடர்வோம் எனத் தெரிவித்துள்ளார்.

முதல்வரின் புத்தாய்வுத் திட்டம்

தொழில்கல்வி இளநிலை பட்ட மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜூலை 31: முதல்வரின் புத்தாய்வுத் திட்டத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள தொழில்கல்விப் படிப்புகளில் இளநிலை பட்டம் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.இதற்கான அறிவிப்பை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை புதன்கிழமை வெளியிட்டது. அதன் விவரம்:

தமிழ்நாடு முதல்வரின் புத்தாய்வுத் திட்டம் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது. 2024-26-ஆம் ஆண்டுக்கான புத்தாய்வுத் திட்டத்துக்கு பட்ட மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். மொத்த இடங்கள் 25. மாதாந்திர ஊதியம் ரூ.65 ஆயிரத்துடன் கூடுதல் படியாக ரூ.10 ஆயிரம் அளிக்கப்படும். ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கான வயது வரம்பு 35. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான வயது வரம்பு 33.

கல்வித் தகுதி: தொழில்கல்விப் படிப்புகளில் இளநிலைபட்டத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண்மை, கால்நடை அறிவியல், கலை, அறிவியலில் முதுநிலைப் பட்டத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழ்மொழி பயன்பாட்டுத் திறன் கட்டாயமாகும். தேர்வு முறையானது மூன்று கட்டங்களாக நடைபெறும். கணினி அடிப்படையிலான முதல்கட்டத் தேர்வு, விரிவான எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ், ஆக. 6 முதல் 26-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை. மேலும் விவரங்கள் மற்றும் இணையவழி விண்ணப்பம் செய்ய www.tn.gov.in/tncmfp அல்லது www.bim.edu/tncmfp ஆகியவற்றை பார்வையிடலாம். இணையவழி அல்லாத வேறு முறைகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படாது என்று சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எஸ். அதிகாரி ஏ.கே.விஸ்வநாதன் பணி ஓய்வு

டிஜிபி வாழ்த்து

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத் தலைவர் நிர்வாக இயக்குநர் மற்றும் காவல் துறை இயக்குநர் ஏ.கே.விசுவநாதன் பணி ஓய்வு பெறுவதையொட்டி சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் புதன்கிழமை நடைபெற்ற பிரிவு உபசார விழாவில் நினைவுப் பரிசு வழங்கிய தமிழக டிஜிபி சங்கர் ஜிவால். உடன் சென்னை மாநகரக் காவல் ஆணையர் அருண், டிஜிபி சீமா அகர்வால், ஏடிஜிபி மகேஷ் குமார் அகர்வால்.

சென்னை, ஜூலை 31: பணி ஓய்வு பெற்ற தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத் தலைவர் ஏ.கே.விஸ்வநாதனுக்கு தமிழக டிஜிபி சங்கர் ஜிவால் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

சென்னை மாநகர காவல் ஆணையராக 2017 மே 15 முதல் 2020 ஜூலை 1 வரை பணியாற்றியவர் ஏ.கே.விஸ்வநாதன். 1990-ஆம் ஆண்டு யு.பி.எஸ்.சி. தேர்வில் தமிழக கேடரில் ஐ.பி.எஸ். அதிகாரியாக தேர்வான ஏ.கே.விஸ்வநாதன், தருமபுரி மாவட்டத்தின் ஏ.எஸ்.பி.யாக தனது பணியை தொடங்கினார். சென்னை மாநகரின் மூன்றாம் கண் எனப்படும் கண்காணிப்பு கேமரா பொருத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

தொடர்ந்து 34 ஆண்டுகள் காவல்துறையில் பல்வேறு உயர் பொறுப்புகளில் பணியாற்றிய இவர், நிறைவாக தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக பதவியில் இருந்த நிலையில் புதன்கிழமையுடன் பணி ஓய்வு பெற்றார்.

இவருக்கான பிரிவு உபசார விழா சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் புதன்கிழமை நடைபெற்றது. அப்போது, காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை வாகனத்தில் சென்றபடி பார்வையிட்ட விஸ்வநாதனுக்கு டிஜிபி சங்கர் ஜிவால் மற்றும் மாநகர காவல் ஆணையர் அருண் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர். மேலும், பல்வேறு காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

நேபாளம், பூடான், காஷ்மீருக்கு விமான சுற்றுலா

ஐஆர்சிடிசி

சென்னை, ஜூலை 31: நேபாளம், பூடான், இலங்கை, காஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளுக்கு சிறப்பு விமான சுற்றுலாவை இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் (ஐஆர்சிடிசி) ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து ஐஆர்சிடிசி புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் இந்திய ரயில்வேயின் கீழ் ஐஆர்சிடிசி எனும் பொதுத் துறை நிறுவனம் செயல்படுகிறது. இதன்மூலம் ரயில் மற்றும் விமானம் மூலம் செல்லும் வகையில் பல்வேறு சுற்றுலா திட்டங்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும். அந்த வகையில் தற்போது சிறப்பு விமான சுற்றுலா அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேபாளம் (ஆக.14), இலங்கை (ஆக.29), பூடான் மற்றும் காமக்யா கோயிலுக்கு (ஆக.15) விமான சுற்றுலா அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் நேபாள சுற்றுலாவுக்கு ஒரு நபருக்கு ரூ.54,000, இலங்கைக்கு ரூ.64,500, பூடான் மற்றும் காமக்யா கோயிலுக்கு ரூ.92,000 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

அதேபோல், உள்நாட்டு சுற்றுலா பயணமாக காஷ்மீருக்கு ஆக.11-ஆம் தேதியும், குஜராத்துக்கு ஆக.31-ஆம் தேதியும், சார்தாம் – ஹரித்வார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி, உள்ளிட்ட தலங்களுக்கு செப்.15-ஆம் தேதியும், கயா, காசி, பிரயக்ராஜ், அயோத்திக்கு செப்.1-ஆம் தேதியும் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகிறது. இதற்கு கட்டணமாக நபர் ஒருவருக்கு ரூ. 41,000 முதல் ரூ. 62,000 வரை வசூலிக்கப்படும்.

கட்டண உள்ளடக்கம்: இந்த சுற்றுலாவுக்கான கட்டணத்தில் விமானக் கட்டணம், விசா, உள்ளூர் போக்குவரத்து, தங்கும் வசதி, உணவு, சுற்றுலா மேலாளர், பயணக் காப்பீடு, ஜி.எஸ்.டி. உள்ளிட்டவை அடங்கும்.

மத்திய, மாநில மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்கள் இந்த சுற்றுலாவில் பயணித்து 'எல்டிசி' சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பயணத்துக்கு ஐஆர்சிடிசி அலுவலகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ரயில் முன்பதிவு பொது சேவை மையங்களில் முன்பதிவு செய்துகொள்ளலாம்.

மேலும் தகவல்களுக்கு திருச்சி: 82879 32070, மதுரை: 82879 32122, 82879 31977, சென்னை: 90031 40682, 82879 31968 ஆகிய கைப்பேசி எண்கள், www.irctctourism.com எனும் இணையதள முகவரியை அணுகுமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆடி அமாவாசை: 1,140 சிறப்பு பேருந்துகள்

சென்னை, ஜூலை 31: வார இறுதி நாள்கள், ஆடி அமாவாசை தினத்தையொட்டி வெள்ளிக்கிழமை முதல் 1,140 பேருந்துகள் இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

வார விடுமுறை மற்றும் ஆடி அமாவாசை நாள்களான வெள்ளிக்கிழமை (ஜூலை 2), சனிக்கிழமை(ஜூலை 3), ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 4) ஆகிய நாள்களில் சென்னையிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

அதன்படி, சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களுக்கு வெள்ளிக்கிழமை வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 295 பேருந்துகளும் சனிக்கிழமை 325 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு வெள்ளி, சனி தலா 60 பேருந்துகள் என 120 பேருந்துகளும் இயக்கப்படும். பெங்களூரு, திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படும்.

இதுதவிர, வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசையை முன்னிட்டு மேல்மலையனூருக்கு அதிக அளவில் பயணிகள் பயணிப்பார்கள் என்பதால், அன்றைய தினம் சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து 200 சிறப்பு பேருந்துகள் என மொத்தம் 1,140 பேருந்துகள் இயக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு

சென்னை, ஜூலை 31: தமிழகத்தில் இளநிலை, முதுநிலை சட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் கீழ் 26 அரசு மற்றும் தனியார் சட்டக் கல்லூரிகள் (சீர்மிகு சட்டப்பள்ளி உட்பட) இயங்கி வருகின்றன.

இவற்றில் 3 ஆண்டு எல்எல்பி சட்டப் படிப்புகளுக்கு 2,530 இடங்கள் உள்ளன. இவை நிகழ் கல்வியாண்டு (2024-25) இணைய வழி கலந்தாய்வு மூலம் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான இணையதள விண்ணப்பப் பதிவு கடந்த ஜூலை 3-ஆம் தேதி தொடங்கி புதன்கிழமையுடன் நிறைவு பெற்றது. மொத்தம் 16 ஆயிரம் மாணவர்கள் வரை விண்ணப்பித்திருந்தனர்.

இந்நிலையில், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று 2-ஆவது முறையாக விண்ணப்பிக்கும் கால அவகாசம் ஆக. 10 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

விருப்பமுள்ள மாணவர்கள் www.tndalu.ac.in என்ற இணையதளம் வழியாக துரிதமாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப விதிகள், விண்ணப்பக் கட்டணம் உள்ளிட்ட கூடுதல் விவரங்களை மேற்கண்ட வலைதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

இதேபோன்று முதுநிலை சட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் அவகாசம் ஆக.5 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று சட்டப் பல்கலை. பதிவாளர் கௌரி ரமேஷ் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

திடீர் கோளாறு: விமானப் படை ஹெலிகாப்டர் தரையிறக்கம்

காஞ்சிபுரம், ஜூலை 31: இந்திய விமானப் படைக்கு சொந்தமான பயிற்சி ஹெலிகாப்டரில் திடீரென கோளாறு ஏற்பட்டதன் காரணமாக காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம் வயல் வெளியில் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது (படம்).

உத்தரமேரூர் ஒன்றியத்துக்குட்பட்ட சாலவாக்கம் அருகே திருவந்தார் கிராமப் பகுதியில் உள்ள சாய்பாபா கோயில் அருகே ஹெலிகாப்டர் ஒன்று திடீரென தரையிறங்கியது. சுமார் 4 ஏக்கர் பரப்பளவுள்ள காலியாக இருந்த வயல்வெளிப் பகுதியில் ஹெலிகாப்டர் ஒன்று தரையில் இறங்கி நிற்பதை அப்பகுதி பொதுமக்கள் அச்சத்துடன் அருகில் சென்று பார்த்தனர்.

விமானப்படைக்கு சொந்தமான பயிற்சி ஹெலிகாப்டரில் ஒரு விமானியும், மற்றொரு பயிற்சி விமானியும் இருந்ததும் தெரிய வந்தது.

தாம்பரம் விமானப்படை தளத்தில் இருந்து புறப்பட்டு காஞ்சிபுரம் வழியாக வானில் சென்று கொண்டிருந்த போது திடீரென ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு காரணமாக அவசரமாக தரையிறக்கப்பட்டதாகவும் தெரிய வந்தது.

தகவலறிந்து சென்னையிலிருந்து 3 தொழில் நுட்ப வல்லுநர்கள் வந்து ஹெலிகாப்டரிலிருந்த பழுதுகளை நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

மண்டல அலுவலகம் சென்னை தெற்கு
எண்.75, மாணிக்கம் சந்து, கிண்டி, சென்னை-600032
Mob: 94983 46053 / 90252 43215
E-mail : rlchnro1@canarabank.com
Canara Bank கனரா வங்கி — Syndicate

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கனரா வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை கனரா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெறவேண்டிய கடன் தொகையை கனரா வங்கிக்கு வரவேண்டிய கடன்தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் **06.09.2024 அன்று காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

வ.எண்.1: (செயின்ட் மேரிஸ் ரோடு கிளை) கடன்தாரர்கள்: Mr.இம்ரான் கான், S/o.முகமது ஷாஜகான், எண்.25/14, சீனிவாசபுரம், 2வது தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600021 **மேலும் முகவரி**, 41/6, அப்பர்சாமி கோயில் தெரு, திருவொற்றியூர், திருவள்ளூர்-600 019 **மேலும் முகவரி**, ஃப்ளாட் எண்.B3 மூன்றாவது தளம், மனை எண்.1, 2 & 3, நீலாங்கரை-துரைப்பாக்கம் லிங் ரோடு (பாண்டியன் சாலை), நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, சென்னை-600097. கடன் நிலுவைத்தொகை **30.07.2024** அன்றுள்ளபடி ₹73,64,005/- மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விவரம்: தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்.14/3, பட்டா எண்.5931, புதிய பட்டா எண்.7116, பட்டா படி சர்வே எண்.14/3C2, மனை எண்.3, பழைய சர்வே எண்.14/3 பகுதி, பழைய பட்டா எண்.5931, புதிய பட்டா எண்.7119, பின்னர் கணினிமயமாக்கப்பட்ட பட்டா எண்.7337, பட்டா படி புதிய சர்வே எண்.14/3C5, **ஃப்ளாட் எண்.B3, மூன்றாவது தளம்,** (பெருநகர சென்னை மாநகராட்சி ஆல் ஒப்புதல் பெற்ற வார்டு எண்.193, 26.07.2018 தேதியிட்ட சப்-டிவிஷன் திட்ட அனுமதி எண்.**SD/WDCN15/00321/18**) **மனை எண்.1, 2 மற்றும் 3, துரைப்பாக்கம் லிங்க் ரோடு, நீலாங்கரை கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, முன்னர் காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது சென்னை மாவட்டம்** என்னும் முகவரியில் **1100 சதுர அடி குடியிருப்பு ஃப்ளாட், (பொது இடம் மற்றும் பொது பங்கு உட்பட)** அதனுடன் ஒரு மூடிய கார் பார்க்கிங், **மொத்தமுள்ள 2846 சதுர அடியில் 335 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்** அதனுடன் அனைத்து பொருத்துதல்கள், T.N.E.B மின் இணைப்பு & டெபாசிட் மற்றும் இதர வசதிகள். **மனை எண்.1-ன் எல்லைகள்:** வடக்கு: ஒக்கியம் துரைப்பாக்கம் - நீலாங்கரை லிங்க் ரோடு, தெற்கு: மனை எண்.2, கிழக்கு: Mr.S.இளங்கோவன் சொத்து, மேற்கு: 16 அடி அகல ரோடு அளவுகள்: வடக்கு பக்கம்: 8.54 மீட்டர் (28 அடி), தெற்கு பக்கம்: 8.54 மீட்டர் (28 அடி), கிழக்கு பக்கம்: 9.84 மீட்டர் (32.3 அடி), மேற்கு பக்கம்: 9.84 மீட்டர் (32.3 அடி) **83.98 சதுர மீட்டர் அதற்கு சமமாக 904 சதுர அடி. மனை எண்.2-ன் எல்லைகள்:** வடக்கு: மனை எண்.1, தெற்கு: மனை எண்.3, கிழக்கு: Mr.S.இளங்கோவன் சொத்து, மேற்கு: 16 அடி அகல ரோடு, அளவுகள்: வடக்கு பக்கம்: 8.53 மீட்டர் (28 அடி), தெற்கு பக்கம்: 8.53 மீட்டர் (28 அடி), கிழக்கு பக்கம் 9.66 மீட்டர் (31.68 அடி), மேற்கு பக்கம் 9.66 மீட்டர் (31.68 அடி) **82.44 சதுர மீட்டர் அதற்கு சமமாக 887 சதுர அடி மேற்கூறிய இரண்டு மனைகளின் மொத்த பரப்பு 1791 சதுர அடி (ஜட்டம் எண்.1) மற்றும் மனை எண்.3-ன் எல்லைகள்:** வடக்கு: மனை எண்.2, தெற்கு: பட்டாபி நாயக்கர் சொந்தமான சொத்து, கிழக்கு: Mr.S.இளங்கோவன் சொத்து, மேற்கு: 16 அடி அகல ரோடு மற்றும் மனை எண்.4 அளவுகள்: வடக்கு பக்கம் 7.01 மீட்டர் (23 அடி), தெற்கு பக்கம்: 7.08 மீட்டர் (23.1 அடி), கிழக்கு பக்கம்: 13.5 மீட்டர் (44.3 அடி), மேற்கு பக்கம் 14.45 மீட்டர் (47.3 அடி) **1055 சதுர அடி (ஜட்டம் எண்.II) ஜட்டம் எண்.I மற்றும் II-ன் மொத்த பரப்பு 2846 சதுர அடி**

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 64,85,000/- டேவணித்தொகை (EMD) ₹ 6,48,500/-

EMD Remittance: Canara Bank, St. Mary's Road Chennai A/c No.209272434 IFSC Code: CNRB0001287

வ.எண்.2: (கோட்டூர்புரம் கிளை) கடன்தாரர்கள்: மில்லெனியம் குளோபல் டிரேட் லிங்க்ஸ், பழைய எண்.115A/5, புதிய எண்.30, 3வது அவின்யூ, அண்ணா நகர், சென்னை - 600040, **Mr.M.சதீஷ் குமார்,** S/o.மாடசாமி, கதவு எண்.48, ஏகவள்ளியம்மன் கோயில் தெரு, திருவொற்றியூர், சென்னை-600019 **மேலும் முகவரி** : எண்.73, அலெக்ஸ் நகர் B காலனி, மாதவரம், சென்னை-600060 **மேலும் முகவரி:** பழைய எண்.4/56, புதிய கதவு எண்.119A, செந்தமிழ் நகர், திருவீதி அம்மன் கோயில் தெரு, மேடவாக்கம் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம். கடன் நிலுவைத்தொகை **30.07.2024** அன்றுள்ளபடி ₹ **1,21,42,477.71** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விவரம்: பழைய சர்வே எண்.204 பகுதி, பட்டா எண்.113, பட்டா படி புதிய சர்வே எண்.436/22, **பழைய கதவு எண்.4/56, புதிய கதவு எண்.119A, செந்தமிழ் நகர், திருவீதி அம்மன் கோவில் தெரு, மேடவாக்கம் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்** என்னும் முகவரியில் உள்ள **ஆவணப்படி 112 சதுர மீட்டர் (1205 சதுர அடி) மற்றும் ஆவணப்படி 1500 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: Mr.E.நரேஷ்-க்கு சொந்தமான வீடு, தெற்கு: Mr.பாய்-க்கு சொந்தமான வீடு, கிழக்கு: Mr.பால்வண்ணன்-க்கு சொந்தமான வீடு & 7 அடி பொது வழிப்பாதை, மேற்கு: Mr.A.சுதாகர்-க்கு சொந்தமான வீடு.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 1,51,00,000/- டேவணித்தொகை (EMD) ₹ 15,10,000/-

EMD Remittance: Canara Bank, Kotturpuram Chennai A/c No.209272434 IFSC Code: CNRB0001550

வ.எண்.3: (மந்தவெளிப்பாக்கம் கிளை) கடன்தாரர்கள்: R G ஹோம் நீட்ஸ், அதன் சார்பாக உரிமையாளர் Mr.ரகுபதி, S/o.பாண்டி, **ஜாமீன்தாரர்: Ms.மகாலக்ஷ்மி,** W/o.ரகுபதி, பழைய எண்.32, புதிய எண்.22, லஷ்மி அம்மன் கோவில், பெரம்பூர், சென்னை-600011 **மேலும் முகவரி:** கதவு எண்.3, மீரான் சாகிப் தெரு, நரசிங்கபுரம், மவுண்ட் ரோடு, சென்னை -600002. கடன் நிலுவைத்தொகை **30.07.2024** அன்றுள்ளபடி ₹ **4,85,83,854.12** மற்றும் வட்டி, இதர செலவுகள்.

சொத்து விவரம்: RS எண்.3258 பகுதி, பிளாக் எண்.64, OS எண் 89, CA எண். 849/1995-96 தேதி 16.08.1995, **புதிய கதவு எண்.3, மீரான் சாகிப் தெரு, நரசிங்கபுரம், மவுண்ட் ரோடு, சென்னை-600 002 என்னும் முகவரியிலுள்ள சுமார் 1716.75 சதுர அடி அல்லது அதற்கு ஏறக்குறைய, ஆனால் பட்டா படி சுமார் 1740 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: RS எண். 3257-ல் உள்ள சொத்து, தெற்கு: RS எண்.3259-ல் உள்ள சொத்து, கிழக்கு: RS எண். 3249/1 & 3249/2-ல் உள்ள சொத்து, மேற்கு: RS எண்.3323, மீரான் சாகிப்-ல் உள்ள சொத்து.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 4,92,60,000/- டேவணித்தொகை (EMD) ₹ 49,26,000/-

EMD Remittance: Canara Bank, Mandavelipakkam Chennai A/c No.209272434 IFSC Code: CNRB0000937

ஏல உயர்வுத்தொகை: வ.எண்.1: ₹ 50,000/- & வ.எண்.2 & 3: ₹ 1,00,000/-

டேவணித் தொகையினை 03.09.2024 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ 4.00 மணிக்குள் செலுத்த வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிட தேதி மற்றும் நேரம்: 02.09.2024 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) வழங்கப்பட்ட மின் ஏலம் என்ற இணைப்பை பார்க்கவும் அல்லது வங்கியின் சேவை வழங்குனர் M/s Antares System Ltd., Bangalore, Mr.M.குணசீலன், Contact No-97319 67722, email id: gunaseelan.m@antaressystems.com-ல் தொடர்பு கொள்ளவும் அல்லது வ.எண்.1: முதுநிலை மேலாளர், கனரா வங்கி, செயின்ட் மேரிஸ் ரோடு கிளை Mob: 9444221287/ 9902804654, வ.எண்.2 : மேலாளர், கனரா வங்கி, கோட்டூர்புரம் கிளை, Mob: 98864 88300 / 94452 41550, வ.எண்.3 : மேலாளர், கனரா வங்கி, மந்தவெளிப்பாக்கம் கிளை, Mob: 80734 39371 / 94440 80937 அல்லது கோட்ட மேலாளர், கனரா வங்கி, மண்டல அலுவலகம் சென்னை தெற்கு கிளை, (Ph. No.: 94983 46053 / 90252 43215)) எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

Portal of E-Auction: https://www.bankeauctionwizard.com

தேதி : 30.07.2024
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி

கடன் வசூல் தீர்ப்பாயம்-III, சென்னை
வேது தளம், அஷ்டலக்ஷ்மி ஆபிஸ் பில்டிங், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 006
DRC No.31/2024

கனரா வங்கி, திருவள்ளூர் கிளை ...சான்றிதழ் ஹோல்டர்
-எதிர்-
Mr.நல்லா இப்ராஹிம் & மற்றொருவர் ...சான்றிதழ் கடன்தாரர்கள்

கோரிக்கை அறிவிப்பு

வங்கிகள் & நிதி நிறுவனங்களுக்கு சேர வேண்டிய கடன் வசூலிப்புச் சட்டம் 1993 (அவ்வப்போது திருத்தப்பட்டபடி) பிரிவு 25 லிருந்து 28 வரை மற்றும் வருமான வரிச்சட்டம் 1961 இரண்டாவது அட்டவணை 2வது விதியின் அறிவிப்பு

பெறுநர்,
(1) **Mr.நல்லா இப்ராஹிம் (கடன்தாரர்)** S/o.Mr.சையது இப்ராஹிம் எண்.42/86, 1வது குறுக்கு தெரு, CIT நகர், நந்தனம், சென்னை-600035.
(2) **Mrs.பரிதா பாத்திமா (ஜாமீன்தாரர்)** W/o.Mr.நல்லா இப்ராஹிம், எண்.42/86, 1வது குறுக்கு தெரு, CIT நகர், நந்தனம், சென்னை-600035.

1. உங்களிடமிருந்து கடன் வசூல் சான்றிதழ் விதிகளின் படி (அதன் விவரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது) வசூலிக்கப்பட வேண்டிய கடன் பாக்கியாக ₹ **76,12,796.64** (ரூபாய் எழுபத்து ஆறு லட்சத்து பன்னிரண்டாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஆறு மற்றும் பைசா அறுபத்து நான்கு மட்டும்) உடன் எதிர்கால வட்டியாக 07.09.2019-லிருந்து கடனை பைசல் செய்யும் நாள்வரை ஆண்டிற்கு 12.25% வட்டி (சாதாரண) மற்றும் இதர செலவுகளை குறிப்பிட்டு **O.A.எண்.458/2019** வழக்கில் பிறப்பிக்கப்பட்ட **10.04.2024** தேதி உத்தரவுக்கு இணங்க வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு சேர வேண்டிய கடன் வசூலிப்பு மற்றும் திவால் சட்டம் 1993 (அவ்வப்போது திருத்தப்பட்டபடி) துணைப் பிரிவுகள் 7 & 22 பிரிவு 19-ன்கீழ், **கனம் தலைமை அதிகாரி, கடன் வசூல் தீர்ப்பாயம்-3, சென்னை அவர்களால் 31.05.2024 தேதியன்று (DRC எண்.31/2024)** வசூல் சான்றிதழ் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
2. நீங்கள் இந்த தொகையை இந்த அறிவிப்பு கிடைத்த 15 **தினங்களுக்குள்** சான்றிதழ் ஹோல்டர் வங்கிக்கு டெபாசிட் செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் சட்டப்படி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
3. **சான்றிதழ் கடன்தாரர் எண்.1 மற்றும் 2-ல் உள்ள நபருக்கு அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு பட்டுவாடா ஆகாமல் திரும்ப பெறப்பட்டது.**
4. **எனவே தீர்ப்பாயம் இந்த கோரிக்கை அறிவிப்பினை மாற்று சேவை அறிவிப்பு முறையில் ஒரு ஆங்கில மற்றும் ஒரு தமிழ் செய்தித்தாளில் வெளியிட ஆணை பிறப்பித்துள்ளது. இதற்கான அடுத்த கட்ட விசாரணை நீங்கள் ஆஜராவதற்காக 16.08.2024 அன்று காலை 11.30 மணிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் **15.07.2024** தேதியில் எனது கைப்பட வழங்கப்பட்டது.
Sd/- (P.பிரேம்குமார்)
கடன் மீட்பு அதிகாரி

बैंक ऑफ़ बड़ौदा பாங்க் ஆஃப் பரோடா
மவுண்ட்ரோடு கிளை
1, கிளப் ஹவுஸ் சாலை, அண்ணா சாலை, சென்னை - 600002
தொலைபேசி: 044-23454278 / 279/280/281/339

சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் **2002**ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்சொன்ன சட்டத்தின் 13 (12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விதி 3க்கு ஏற்படி, **கடன்தாரர் திரு. சுதாகர் காசிநாதன் (கடன்தாரர்)**, த/பெ. திரு. காசிநாதன், எண்.24, ஏ பிளாக், நெல்சன் சேம்பர்ஸ், நெல்சன் மாணிக்கம் சாலை, அமைந்தகரை, சென்னை-600029 மற்றும் மேலும் முகவரி: எண்.107/45, பெருமாள் கோவில் தெரு, பெரும்பாடி, அக்ரஹாரம், குடியாத்தம், வேலூர்-632601. ஆகியோர் செலுத்தவேண்டிய தொகை ரூ. **99,35,464.64** (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து நானூற்று அறுபத்து நான்கு மற்றும் காசுகள் அறுபத்து நான்கு மட்டும்) அதனுடன் **11.05.2024** தேதிவரை கணக்கிடப்பட்ட வட்டி மேலும் செலுத்தப்படும் நாள் வரையிலான வட்டி, மேலதிக வட்டி, நிலுவையில் உள்ள வட்டி, இதர கட்டணங்கள், ஆகியவற்றை 60 நாட்களுக்குள் செலுத்தக்கோரி **15.05.2024** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு மற்றும் **27.05.2024** தேதியிட்ட பத்திரிக்கை விளம்பரத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

சம்மந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4)ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், விதிமுறைகளின் விதி 8க்கு இணங்கவும், **30.07.2024** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி அசையா சொத்தினை சுவாதீனம் எடுத்துள்ளார்.

இந்த அறிவிப்பின் மூலம் குறிப்பாக கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் பொதுவாக பொது மக்களுக்கு எச்சரிக்கப்படுவது என்னவென்றால், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்துக்கள் பாங்க் ஆஃப் பரோடா வங்கிக்கு **29.07.2024** தேதிப்படி செலுத்த வேண்டிய தொகையான **ரூ. 1,01,34,909.88 (ரூபாய் ஒரு கோடியே ஒரு லட்சத்து முப்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது மற்றும் காசுகள் எண்பத்தெட்டு மட்டும்)** மேலும் **27.07.2024** முதல் செலுத்தப்படும் நாள் வரையிலான வட்டி, மேலதிக வட்டி, நிலுவையில் உள்ள வட்டி, இதர கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது என்பதால் யாரும் கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மீது எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

SARFAESI சட்டத்தின் 13(8) விதிகளின்படி பாதுகாப்பு மற்றும் விதிகளுக்காகவும் தங்கள் / ஜாமீன்தாரர் கவனத்திற்காகவும் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அசையா சொத்து விவரம்:

சொத்து 1 : சென்னை மாவட்டம், மாம்பலம்-கிண்டி தாலுகா, வேளச்சேரி கிராமம், பழைய சர்வே எண்.317/1 பகுதி TS எண்.1/73, பிளாக் எண்.189 ன் 2520 சதுர அடி நிலம் பழைய சர்வே எண்.317/1 பகுதி TS எண்.1/73, பிளாக் எண்.189 ன் 2479 சதுர அடி நிலம் பழைய சர்வே எண்.317/1 பகுதி TS எண்.1/73, பிளாக் எண்.189 ன் 650 பழைய சர்வே எண்.317/1 பகுதி TS எண்.1/73, பிளாக் எண்.189 ன் பிளாட் எண்.S1 இரண்டாவது தளத்தில் 1100 சதுர அடி, (பொது பகுதிகள் இணைந்த 527 சதுர அடி பிரிந்தும் பிரிக்கப்படாத பங்கு நிலம், நிலத்தில் உரிமையுள்ள அடமானசொத்து அதன் எல்லைகள் : **வடக்கு** : முத்துகிருஷ்ணா தெரு, **தெற்கு** : காலி நிலம், **கிழக்கு** : காலி நிலம், **மேற்கு** : பூங்கா.

சொத்து 2 : சென்னை மாவட்டம், மாம்பலம்-கிண்டி தாலுகா, வேளச்சேரி கிராமம், பழைய சர்வே எண்.317/1 பகுதி TS எண்.1/73, பிளாக் எண்.189 ன் 2520 சதுர அடி நிலம் பழைய சர்வே எண்.317/1 பகுதி TS எண்.1/73, பிளாக் எண்.189 ன் 2479 சதுர அடி நிலம் பழைய சர்வே எண்.317/1 பகுதி TS எண்.1/73, பிளாக் எண்.189 ன் 650 சதுர அடி நிலம் பழைய சர்வே எண்.317/1 பகுதி TS எண்.1/73, பிளாக் எண்.189 ன் பிளாட் எண். S3 இரண்டாம் தளத்தில் 1100 சதுர அடி (பொது பகுதிகள் இணைந்த) 527 சதுர அடி பிரிந்தும் பிரிக்கப்படாத பங்கு நிலம், நிலத்தில் உரிமையுள்ள அடமானசொத்து அதன் எல்லைகள் : **வடக்கு** : முத்துகிருஷ்ணா தெரு, **தெற்கு** : காலி நிலம், **கிழக்கு** : காலி நிலம், **மேற்கு** : பூங்கா.

இடம் : சென்னை
தேதி : 30.07.2024
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா

Muthoottu Mini Financiers
Registered Office: 65/623-K, Muthoottu Royal Towers, Kaloor, Kochi, Kerala - 682017
CIN: U65910KL1998PLC012154 GSTIN: 33AABCM5994M1ZY

GOLD AUCTION NOTICE

... 17.08.2024 அன்று முற்பகல் 10 மணி முதல் ...

CHENNAI DISTRICT AUCTION: MUTHOOTTU MINI FINANCIERS LTD, 57/23, ARYAGOWDAR ROAD, WEST MAMBALAM (1),CHENNAI – 600033 AUCTION DATE: 23.08.2024
TML-AMBATTUR OT: 8878, 8928, 9002, 9746, 9747, 10424. TML-PERAMBUR: 12457, 12458, 12459, 12598, 12706, 13006. TML-ROYAPURAM: 7495. TML-WEST MAMBALAM I: 10185.
CUDDALORE DISTRICT AUCTION: MUTHOOTTU MINI FINANCIERS LTD, NO 27,SANKARAN STREET ,CUDDALORE OT - 607003 AUCTION DATE: 22.08.2024
TML-CUDDALORE OT: 673, 1101, 1103, 1111, 1301, 1333.
KANCHIPURAM DISTRICT AUCTION: MUTHOOTTU MINI FINANCIERS LTD, 49,KAMARAJAR STREET,SHANMUGA COMPLEX,KANCHEEPURAM - 631501 AUCTION DATE: 24.08.2024
TML-ADAMBAKKAM: 6877, 6930, 6974, 6978, 6995. TML-KANCHIPURAM: 7621, 7622, 7629, 7633, 7635, 7839. TML-WEST TAMBARAM: 7165, 7207, 7383, 7402, 7450, 7588.
TIRUVALLUR DISTRICT AUCTION: MUTHOOTTU MINI FINANCIERS LTD NO 7, FIRST FLOOR,OCF ROAD, AVADI – 600054 AUCTION DATE: 23.08.2024
TML-AVADI: 14925, 14928, 15520, 15531, 15952, 73904518. TML-EAST MOGAPPAIR: 9810, 9859, 9975. TML-GANDHI NAGAR: 41126, 41513, 41991, 42037, 42079, 42092, 42117, 42218. TML-KALADIPET: 10430, 10535, 10587, 10711, 10764, 10765, 10766, 10767, 10769, 10802, 11058, 11206, 11420. TML-KAVANGARAI: 44732, 44738, 44768, 10144685. TML-MANALI: 8754, 8807, 8855. TML-MINJUR: 7180, 7194, 7210, 7260, 7285, 7510, 7563, 7567, 7576, 7589, 7628, 7647, 7650. TML-PERAMBUR MARKET JN: 7810, 7866. TML-REDHILLS: 1210501841, 1210502208, 1210502471. TML-THIRUMULLAIVAYAL: 11347, 11427, 11428, 11429, 11594, 11717, 15568, 15621. TML-VILLIVAKKAM: 13756, 13826, 13827, 14235, 14236, 14507, 14601, 14690. TML-WEST MOGAPPAIR: 44741, 44793, 44836, 44870, 44878, 45111, 45142, 45174. TML-WIMCO NAGAR: 10621, 10732, 10758, 10900, 10906, 10908, 11042, 11153.
VILLUPURAM DISTRICT AUCTION: MUTHOOTTU MINI FINANCIERS 103/6, PONDY VILLUPURAM MAIN ROAD, KANDAMANGALAM AND POST, VILLUPURAM -605102 AUCTION DATE: 24.08.2024
TML-KANDAMANGALAM: 12270, 12436, 12724, 12725, 12906, 12941, 12943, 13284, 13324, 13830.
PUDUCHERRY DISTRICT AUCTION: MUTHOOTTU MINI FINANCIERS LTD , NEW NO.50, OLD NO. 46, VILLIANUR MAIN ROAD,PAVAZHA NAGAR,PUDUCHERRY- 605005 AUCTION DATE: 22.08.2024
PDY-REDDIARPALAYAM: 1417001039, 1417001073, 1417001091, 1417001093, 1417001094, 1417001095, 1417001098, 1417001099, 1417001100, 1417001104, 1417001126, 1417001178, 1417001219, 1417001604, 1417001653.

... auction@muthoottumini.com
குறிப்பு: 1. ... PAN அட்டை எண் / GST ... ரூ.2,00,000/- ...
2. ... RTGS மூலம் செலுத்த வேண்டும்.

Place: Kaloor,
Date: 01/08/2024.
Authorised Officer, Muthoottu Mini Financiers Ltd

kotak **கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 27-BKC, C 27, "G" பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கிழக்கு), மும்பை - 400051.
கிளை அலுவலகம்: 5 ஆவது தளம், A விங், சாம்சன் டவர்ஸ், எண் 402 L-பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600 008
பின்சேர்க்கை-IV-A [விதி 8(6)-க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்]

விற்பனையுடன் கூடிய ஏல அறிவிப்பு அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான மின் - ஏல விற்பனை அறிவிப்பு

... 1. **திருமதி ஆர்த்தி விஜ்,** எண்.232 N பிளாக், 27 ஆவது தெரு, அண்ணாநகர் கிழக்கு, சென்னை- 600102 2. **திரு. விஸ்வதீப் பாஜ்ஜி,** எண்.232 N பிளாக், 27 ஆவது தெரு, அண்ணாநகர் கிழக்கு, சென்னை- 600102 ... 05-06-2024 அன்றுள்ளபடியான ரூ.58,19,244/- ... 18.11.2022 ...

கடன் கணக்கு எண்	கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர்(கள்) / ஜாமீன் தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நாள்	குறைந்தபட்சக் கேட்பு விலை (RP)	டேவணித் தொகை (RP இன் 10%) மற்றும் கடைசி நாள்	ஆய்வு நாள் & நேரம்	ஏல நாள் & நேரம்	மொத்த நிலுவைத் தொகை	அறியப்பட்ட வில்லங்கங்கள், ஏதேனும் இருந்தால்
HF - 37416359 CRN (46742514)	1.திருமதி ஆர்த்தி விஜ், 2.திரு. விஸ்வதீப் பாஜ்ஜி	ரூ. 38,84,122.72/- 19.07.2021 அன்றுள்ளபடி	ரூ. 85,39,200/-	ரூ.8,53,920/- 19-08-2024 நாள் அல்லது அதற்கு முன்னர்	14.08.2024 நாளன்று முற்பகல் 11.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை	20.08.2024 நாளன்று முற்பகல் 11.00 மணி முதல்	ரூ.58,19,244/- 05.06.2024 அன்றுள்ளபடி	இல்லை

... www.bankeauctions.com ... https://auctions.kotak.com/properties/auction-notices/ ... (+919686812683), ... (+919841123344)

இடம்: செங்கல்பட்டு
நாள்: 01.08.2024
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்-க்காக அதிகாரப்பூர்வ அலுவலர்